2. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(ட) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** உரிமைக் குழு, ப்ரிவிலேஜஸ் கமிட்டி. பற்றிய தீர்மானத்தை மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் லீடர் ஆஃப் தி ஹௌஸ் கொண்டு வருவார்கள்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டசபை விதிகளைச் சேர்ந்த 183-வது விதியின்கீழ், 1967-68-ம் நிதியாண்டுக்குரிய உரிமை பற்றிய குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பன்னிரண்டு உறுப்பினர்களை, மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இச்சபை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை நிறைவேற்றுவதா இல்லையா என்பது அவை முன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இதுபற்றி குரல் வாயிலாக உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும். தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று கருதுகிறவர்கள் "ஆம்" என்று கூறுங்கள். ('ஆம்' என்ற குரல்கள்.) எதிர்ப்பவர்கள் இருந்தால் இல்லை என்று சொல்லுங்கள். 'இல்லை' என்பவர்கள் இல்லை, ஆகவே, மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக அறிவிக்கிறேன்.

3. அறிவிப்புக்கள் (தொடர்ச்சி).

(உ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் :** உரிமைக் குழுவிற்குத் தேர்தல் நடத்துவதற்கு . ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி அவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளுக்கிணங்க வேட்பாளர்களின் நியமனத்தாள்கள் 23-3-1967, வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 23—3—1967 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 25—3—1967 சனிக் கிழமை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது பன்னிரண்டுக்கு மேற்படுமாயின் 27—3—1967, திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

2. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(ஏ) பேரவையினர் வசதிக் குழுவிற்கான தேர்தல்.

**மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் :** "தமிழ்நாடு சட்டசபை விதிகளைச் சேர்ந்த 221-வது விதியின்கீழ், 1967–68-ம் நிதியாண்டுக்குரிய பேரவையினர் வசதிக் குழுவின் உறுப்பினர்

களாய் இருக்கும்படி பதினேறு உறுப்பினர்களை மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இச்சபை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(தீர்மானம் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களால் பேரவையின் குரல் வாக்குக்கு விடப்பட்டு, அவையின் முடிவைத் தெரிவிக்கும் நேரத்தில்.)

### 4. ஒழுங்குப் பிரச்சினை.

#### பேரவையின் முடிவை அறிந்து அறிவிக்கும் முறை.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I am rising on a point of order. Whenever a motion is put to the vote, in the Parliament or Assembly, the Hon. Speaker determines the number of persons who are for it and the number of persons who are against it. If the largest number of persons happen to say 'Aye', then it is the practice for the Hon. Speaker to say 'Ayes have it' and not 'Noes do not have it'. So, it is proper that we should say ஆம் have it.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சுட்டிக்காட்டியது போன்று, தீர்மானம் வந்தவுடனே தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்படுகிறது என்று தெரிவித்தால் அப்போது தீர்மானத்தை ஆதரிக்கக் கூடிய உறுப்பினர்கள் "ஆம்" என்று சொல்லுவார்கள், எதிர்க்கக் கூடியவர்கள் "இல்லை" என்று சொல்லுவார்கள். அப்போது தாங்கள் "'ஆம்' அதிகம், 'ஆம்' அதிகம், 'ஆம்' அதிகம்" என்று மூன்று தரம் சொல்லி முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய மன்ற முதல்வர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்து "இல்லை" என்று சொல்லுவதற்கு ஒருவராவது இருந்தால், பெரும்பான்மை, சிறுபான்மை பார்த்து சபையின் முடிவைச் சொல்ல வேண்டும். ஆனால், "இல்லை" என்று சொல்லுவதற்கு ஒருவருமே இல்லாவிட்டால், அப்படியே தீர்மானத்தை நிறைவேற்றிவிடலாம். குரல் வாயிலாக வாக்குகளைத் தீர்மானப்படுத்தும் போது "ஆம்" என்ற குரல்கள் அதிகமாக இருந்து, "இல்லை" என்ற குரல்கள் குறைவாக இருந்தால் "'ஆம்' என்பவர்கள் பெரும்பான்மை" என்று சொல்லி பிறகு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். "இல்லை" என்று சொல்லுவதற்கு ஒருவருமே இல்லாமலிருந்தால், அதைச் சொல்லவேண்டும் என்ற அவசியம் இல்லை.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I am sorry to interrupt the Chair often and I do not think it is an offence. Even if nobody says 'No' and everbody says 'Aye', it is the duty of the Chair to say 'Ayes have it' Ayes have it' and 'Ayes have it'. No even once but thrice it has to be announced and then only the House has to accept it as a thing which has not been opposed.